# மெட்ரோவில் கோலப்போட்டி



■ உடல் உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி, மெகா கோலப்போட்டி நடந்தது. இடம்: ஷெனாய் நகர் மெட்ரோ ரயில் நிலையம்.

**சென்னை, பிப். 10–**

மெட்ரோ ரயில் நிலையத்தில், உடல் உறுப்பு தானத்தை வலியுறுத்தி, மெகா கோலப் போட்டி நடந்தது.

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம், மோகன் அறக்கட்டளை நிறுவனம் இணைந்து, ஷெனாய் நகர் மெட்ரோ ரயில் நிலையத்தில், மெகா கோலப் போட்டி நடத்தியது.

பொதுமக்களிடம் உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும், உடல் உறுப்பு தானம் செய்தவர்களை அங்கீகரிக்கும் வகையில், ‘அழியாத கோலங்கள்’ என்ற தலைப்பில், கோலப்போட்டி நடந்தது.

நேற்று முன்தினம் மதியம், 2:00 மணிக்கு துவங்கி, மாலை, 6:00 மணி வரை போட்டி நடந்தது.

இதில், 150க்கும் மேற்பட்ட பெண்கள் பங்கேற்று, உடல் உறுப்பு தானத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் வகையில், ரங்கோலி, பூக்கோலங்கள் போட்டு, தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.

இதில் பங்கேற்றவர்களுக்கு, சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.